விதையினைத் தெரிந்திடு - பாரதி

# மகாகவி

மாத இதழ்

விலை ரூ. 5/-

ஆகஸ்டு 2009



உலகத்தமிழ்ச் சிற்றிதழ்களின் நுழைவாயில்

# அத்துமீறல்

ஜூன் 24 - தில்லி விமான நிலையத்தில் - முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். அப்துல் கலாம் அவமானப்படுத்தப் பட்டிருக் கிறார். அமெரிக்காவிலுள்ள நெவர்க் நகருக்குச் செல்ல இருந்த அவர் அமெரிக்காவின் கான்டினென்டல் ஏர்லைன்ஸ் விமான ஊழியர்களால் சோதனைக்குள்ளாக்கப் பட்டிருக்கிறார். அவர்கள் கலாமின் செருப்பைக்கூட விடவில்லை. உடல் சோதனையும் கூடவே செல்போன், கைப்பை என எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருக்கிறது.

2003 -ல் இந்திய இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், 2008 -ல் மாஸ்கோவில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி என சோதனைக்குள்ளாக்கப்பட்ட பட்டியல் தொடர்கிறது.

இந்திய ஏர்லைன்ஸ் அதிகாரிகள் - அமெரிக்காவின் ஜார்ஜ் புஷ், பில் கிளிண்டன் இவர்களை இதேபோல் சோதனைக்குட்படுத்து வார்களா? - அமெரிக்கர்கள்தான் விட்டுவிடுவார்களா?

ஒருவேளை அவர்களைப்போல நாம் நேர்மையானவர்கள் இல்லை என்கலாமா? நமக்குத்தான், அவமானம் ஒரு பாதிப்பை யும் தந்துவிடாது என்கலாமா? வழக்கம்போல சாப்பிட்டுவிட்டுத் தூங்கலாம்தான்!

கலாம் முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் மட்டுமல்ல. இந்தியாவின் கவுரவம் அவர். இந்திய விண்வெளித்துறைக்கு அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. “பாரதரத்னா” விருது பெற்றவர். இந்திய மாணவர்களிடம் மகத்தான எழுச்சியை ஏற்படுத்திய மாபெரும் தலைவர் அவர். 2020 -ல் அவர் கண்ட கனவு தேசமாம் இந்தியாவை ஒளிரச் செய்யும் - தூரம் அதிகமில்லை.

நமது உணர்வின் மீதான வன்முறையிது. இதை அவமரியாதை என்கிறார்கள் - விதிமுறை மீறலையும் தாண்டிய அத்துமீறல் இது.

– வதிலைபிரபா


ஆசிரியர் - வெளியீட்டாளர்

**வதிலைபிரபா**

பொறுப்பாசிரியர்

நகரவங்கி **இராதாகிருஷ்ணன்**

வடிவமைப்பு

**ஜெ.சுதாகர்**

கௌரவ சட்ட ஆலோசகர்கள்

திரு. **M. போஸ்** பி.ஏ.,பி.எல்.,
வழக்குரைஞர்

திருமதி. **M. சண்முகதேவி** பி.ஏ.,பி.எல்.,
அரசுவழக்குரைஞர்

**மகாகவி**

**கவிதை : 14** **வரி : 4**



ஆசிரியர் **மகாகவி,**
9-6-18/2, ஒற்றைத்தெரு,
வத்தலக்குண்டு - 624 202. தமிழ்நாடு.

பேச : **96296 52652, 99946 31267.**
இமெயில் : mahakavimonthly@yahoo.com
**www.mahakavimonthly.blogspot.com**



**“This Little Journal is published with Financial Assistance from the Central Institute of Indian Languages (Ministry of Human Resource Development, Department of Higher Education, Govt. of India), Manasagangotri, Mysore - 570 006 vide sanction letter 53-10(12)/2008-09/TAM/LM/GRNT dated April 15, 2009 under the scheme of Grant-in-Aid.”**

## ஒற்றினைப் போற்றுவீர்

**சொ. இராசாமணி (எ) எழிலரசு**

ஒற்றிழந்த தமிழ் ஓங்கி இன்று
சிற்றிதழ் சிறுகதை கவிதை நூல்கள்
குறுநாவல், நாளேடு, விடுத லின்றி
நிறைந்து வழியுது; நெஞ்சம் எரியுது!

ஒற்றிழந்த தமிழ் என்றும் உருப்படுமா?
கற்றறிந்து சேர்த்தெழுத வேண்டாமா?
தொற்றுநோய் ஆகிஇம்முறை பரவிடுதே!
பற்றுடனே தமிழ் எழுதப் பழகுங்களே!

ஒற்றிழந்த தமிழ்வரியை ஒலித்துப் பார்க்க
வேற்றுமொழி போலஅது தோன்றிடுமே
தாய்மொழி மெல்லச் சிதைவது போதாதா?
சேய்நாம் விரைந்தே காத்திடல் வேண்டாமா?

கதைகளும் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதுவோரே!
கற்றிடுக கணக்காய் ஒற்றெழுத்தின் பயன்களை
மிகுமிடம் மிகாவிடம் முறையாக அறிந்திடுக
பிழையின்றி எழுதலாம் எழுதுங்கலை வளர்ந்திடுமே!


அழகிய புத்தகங்களின் அணிவகுப்பு...

லியா
பதிப்பகம்

**வதிலைபிரபா**
ஒற்றைத்தெரு,
வத்தலக்குண்டு - 624 202.
பேச : 96296 52652


## கவிவேந்தருக்கு வாழ்த்துப் பூ..

மேனாள் அமைச்சர் கவி வேந்தர் **கா. வேழவேந்தன்** அவர்கள் தமிழக முதல் அமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ் அறிவியல் மன்றத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தனது கவித்திறன்-சொற் திறனால் தமிழக மக்களின் உணர்விலும்- உள்ளத்திலும் தனியிடம் வகிக்கின்றவர்.

மேனாள் அமைச்சர் அவர்களுக்கு ‘மகாகவி’ தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்வதில் பெருமை கொள்கிறது.

# அறிவிப்பு

'மகாகவி' மாத இதழுக்கான வங்கி வரைவோலை - காசோலையை "Mahakavi Monthly" எனும் பெயருக்கு அனுப்பலாம். வங்கிக் கணக்கு எண். **30723859694** -ல் (State Bank of India) நேரடியாகவும் செலுத்தலாம்.

## அழிவுக் கனா

இப்பொழுதுதான்
செத்ததுபோல் தெரிகிறது.
ஆடைகள் கசங்காமல்
அழகாக இருக்கின்றன.
சொந்தமென
யாருமில்லையா?
நேற்றுவரை
உடன் பயணித்தவர்கள்
எங்கே சென்றார்கள் இன்று.
விதியென நினைத்து
வரும்காலம் பார்க்கச்
சென்றுவிட்டார்களோ..
பிணம் அமைதி காக்கிறது
சாவு அதனை
சாந்தப்படுத்தியிருக்கிறது.
யாரும் அழவில்லையே என
விழித்து விழித்துப் பார்த்து
விழி மூடவில்லை.
இப்படியே கிடந்தால்
உடல் வாடிவிடும்.
எறும்புகள் உடல் ஒடிக்கும்.
எறும்புகளை
பாகப்பிரிவினை கேட்டுவந்த
சொந்தங்களாக
கணக்கில்கொண்டு
ஆறுதலடையும்..
அந்த பட்டாம்பூச்சி பிணம்.

- பெ. விஜயராஜ்காந்தி

### வாழ்த்துகிறோம்

உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பினரும், தச்சன் இதழாளரும், தமிழன் எக்ஸ் பிரஸ் துணை ஆசிரியருமான கவிஞர். தச்சன் நாகராஜன் இணையருக்கு 'மகாகவி' தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்கிறது.

துளி இதழாளர் சேலம் பாலன் அவர்களின் அன்பு மகள் பா. பாரதி மீனா - ப. சிவப்பிர காசம் ஆகியோருக்கு 03-06-09 அன்று கோபி அருள்மிகு பச்சை மலை முருகன் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு 'மகாகவி' தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்கிறது.

### வருந்துகிறோம்

நா.வை. சொக்கலிங்கம் -'யாதும் ஊரே' இதழாளர் - மூத்த இதழாளர் - சிற்றிதழ் மாநாடு என்றால் ஓடிவந்து பங்கெடுப்பவர் - நான் நண்பர்களிடம் கூறும்போது பொதுவாக சிற்றிதழ்கள் என் முகவரிக்கு வரும்போது அவை களை ஒழுங்காக அடுக்கி வைப்பது உண்டு. ஆனால் 'யாதும் ஊரே' இதழை மட்டும் என் தனி நூலகத்தில் நூல்க ளோடு வைப்பதுண்டு எனக் கூறுவேன். ஒவ்வொரு இதழையும் தனி ஆய்வே டாக வெளியிட்டு ஆச்சரியத்துக்கு உள்ளாக்கிய ஐயா. நா.வை. சொக்கலிங்கம் அவர்களின் மறைவுக்கு மகாகவி - உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் தமது வருத்தத்தினைப் பதிவு செய்கிறது.

# சாகித்திய அகாதெமி
# ‘கவிஞர் குழாம்’ நிகழ்வு



சாகித்திய அகாதெமியின் தென்மண்டலச் செயலர் திரு. அ.சு. இளங்கோவன் தலைமையுரை நிகழ்த்துகிறார். உடன் வதிலைபிரபா, சுப்ரபாரதி மணியன், தங்கம் மூர்த்தி

வத்தலக்குண்டு டி.டி. லெட்சுமி மஹாலில் 12-07-09 அன்று சாகித்திய அகாதெமியின் ‘கவிஞர் குழாம்’ நிகழ்ச்சி நடைபெற்றது. முதலாம் அமர்வான உரையரங்கத்திற்கு சாகித்திய அகாதெமியின் தென்மண்டலச் செயலர் திரு. அ.சு. இளங்கோவன் தலைமை தாங்கி சிறப்புரை வழங்கினார். உரையரங்கத்தை உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் வதிலைபிரபா துவக்கிவைத்து உரை நிகழ்த்தினார். சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர் எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன், சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர்கவிஞர். தங்கம் மூர்த்தி, மொழிபெயர்ப்பாளர் ஆணைவாரி ஆனந்தன் உரையாற்றினர்.

இரண்டாம் அமர்வான கவியரங்கிற்கு திரு. சுப்ரபாரதி மணியன் தலைமை தாங்கி உரைநிகழ்த்தினார். இரண்டாம் அமர்வை திண்டுக்கல் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு திரு. சின்னச்சாமி துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். பின்னர் கவிஞர். பழமலய் தலைமையில் நடந்த கவியரங்கில் கவிஞர்கள் சக்திஜோதி, சு. சுபமுகி, ரித்திகா, அமிர்தம் சூர்யா, ஹெச். ஜி. ரசூல் கவிதை வாசித்தனர்.

– ஜெ.சுதாகர்




# காலண்டர் கதைகள்

மாதா மாதங்கள் மாதா மாதங்கள் ஆகும். காலண்டர்களின் ஆரம்ப கால கதை இதுவாகத் தானிருக்கும் என பல்வேறு வரலாற்று அறிஞர்களும் ஒப்புக் கொள்கின்ற விசயம் இதுவே.

வரலாற்றின் மிகத் தெளிவான பதிவுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே நாட்களுக்கான பதிவுகள் தொடங்கிவிட்டன. நீண்ட தலையும் சப்பையான மூக்கும் கொண்ட 'நியாண்டர்தால்' மனித வகை இனம் கலாச்சார மேம்பாடுடைய மனிதனாக மாறத் துவங்கிய காலம். வேட்டையாடி மனிதனாக இருந்த அவனுக்கு பெண்ணே சகலமுமாக இருந்தாள். பெண்ணின் 'படைக்கும் திறன்' மீதான பிரமிப்பு அவனை வெகுவாக ஆட்டுவித்திருந்தது. ஆண்கள் பெரும்பாலும் பொருட்டற்று அலைபவர்களாக இருந்த காலத்தில் பெண்களுக்கான பொறுப்புகள் அதிகமாயிருந்தது.

பெண், குழந்தையை ஈனுபவளாதலால் அவைகளைப் பராமரிக்கும் பொறுப்பும், வேட்டை உணவு கிடைக்காத காலத்திலும் தனது பிள்ளைகளுக்கு உணவளிக்கும் பொறுப்பும், வாழ்க்கைக்கான கற்பித்தல் பொறுப்பும் பெண்ணையே சார்ந்திருந்தது. வேட்டையாடுதல் என்பது பாதுகாப்பிற்காகவும் பிறகு உணவிற்காககவும் நிகழ்த்தப்பட்டது. வேட்டை உணவுகள் எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில் சிரமம் இருந்து வந்தது. எனவே தங்கள் குழந்தைகளுக்கான வற்றாத உணவுத் தேவையின் பொருட்டு பெண்கள் உணவு சேகரிப்பவர்களாகவும் இருந்தனர். தாவர உணவுகள் சேகரிக்கவும், மறுபயிரிடுதலையும் பெண்களே உணர்ந்திருந்தார்கள்.

தேவைகளே கண்டுபிடிப்பின் தாய் ஆதலால், தாயின் தேவைகள் அவளை கண்டுபிடிப்பாளியாகச் செய்தது. கூரிய கவனிப்பும், நுட்பமான பிரதி படுத்தலும் கற்பித்தலும்

நிறைந்தவளாகிய பெண், மனித சமுதாய பரிணாமவளர்ச்சியில் மிக முக்கியப் பங்காற்றும் குறிப்பெடுத்தலையும் செய்தாள்.

தனது தேவைகளை, உணர்வுகளை, உணர்ந்தவைகளை பெண் குறிப்பெடுத்தாள். 'விவேகமான காயம்' என அறிஞர்களால் விவாதிக்கப்படுவதும், மனித சமுதாய உற்பத்தியின் வங்கியும், தனது சுய ஆச்சர்யங்களில் தலையாயதுமான தனது மாதவிடாய்ச் சுழற்சியை அவள் பதிவு செய்தாள். ஆரம்ப கால குகைகளில் பல் வேறு பட்ட நில அமைப்புகளிலும் காணப்பட்ட மாதங்களுக் கான கீறல்களும், குறியீடுகளும் மாதர்கள் கண்ட மாதங்களை உணர்த்துகின்றன. மேலும் சந்திரனின் தேய்பிறை, வளர்பிறை களுக்கும் தனது உடல் மாற்றங்களுக்குமான தொடர்பையும் பெண்ணே கண்டறிந்தாள்.

'மனிதனின் உயர்வு' என்கின்ற தொடரில் பனிப்பிரதேச மான் கொம்பு ஒன்றில் முப்பத்தியோரு நாட்களைக் கொண்ட மாதச்சுற்று காணப்படுவதாக பதியப்பட்டது. இது பல்வேறு வரலாற்று ஆசிரியர்களிடையே உலகளாவிய தர்க்கங்களுக்கு வழிகோலியது. இதனைப் பற்றிய கலந்தாய்வில் இது சந்திர மாதச் சுற்றாக இருக்கலாம் என்றும், பெண்ணின் உடற்சார் உதிரப் போக்கின் குறியீடாக இருக்கலாம் என்றும் விவாதிக்கப்பட்டு இரண்டுமாகவும் இருக்கலாம் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆக, மாதங்களும், நாட்களும், வாரங்களும், வருடங்களும் பல்வேறு இன்றியமையாத காரணங்களால் மனிதனின் நடைமுறை வாழ்க்கைக்கு வந்து அவனை ஆட்டுவித்து வருகிறது.

மாதங்கள் உருண்டோடிக் கொண்டிருக்கின்றன. நீண்டு பயணிக்க வேண்டியிருக்கிறது. தொடர்ந்து செல்லும் பயணங் களை காலண்டர் வழி நடத்திக் கொண்டிருக்க, இந்தக் காலவரிசை, உலக இயக்கம் முடிந்து விடும் என்றும் ஒரு காலண்டரே சொல்லுமா? **2012**ல் உலகம் அழிந்துவிடும் என பெரும்பாலும் பண்டைய உலகவரலாற்றில் பதியப்பெறாத அமெரிக்க பழங்குடியினரின் 'மயான் காலண்டர்' குறிப்பிடுவதாக இப்பொழுதெல்லாம் பேச்சாயிருக்கிறது. ●

## உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் பிற நிகழ்வுகள்

### 5-ஆம் மாநாடு - பொதுக்குழு அமர்வு

நடைபெறும் இடம் : குற்றாலம்

நாள் : 14 - 02 - 2010.

ஏற்பாடு : 'நல்லூர் முரசு' இதழாளர் சொக்கம்பட்டி ரஹீம்.

# கண்டதைச் சொல்கிறேன்



- நகரவங்கி இராதாகிருஷ்ணன்

வத்தலக்குண்டு கிராம நிர்வாக அலுவலகம் முன்பாக பெண்கள் கூட்டம். கிராம நிர்வாக அலுவலகம் முன்பாக கூட்டம் ஒன்றும் புதிதல்ல. இலவச வேட்டி சேலை, முதியோர் பென்சன், சான்றிதழ் வாங்குவது என எப்போதும் கூட்டம் இருக்கத்தான் செய்யும்.

ஆனால், இது அப்படிப்பட்ட கூட்டம் அல்ல. ஒரு குறிப்பிட்ட இடத்தை மையப்படுத்தி, பெண்கள் கூட்டமாய் எட்டிப்பார்த்துக்கொண்டுஏதோதோ பேசிக்கொண்டிருந்தனர்.

என்னவாக இருக்கும் என்ற ஆர்வத்துடன் கூட்டத்தை நோக்கி நடந்தேன். நான் அருகே செல்லும்போது கூட்டத்திலிருந்த ஒரு பெண், அருகிலிருந்த ஒரு குறுகலான சந்தைக் காட்டி ஏதோ சொல்வது எனது காதில் அறைகுறையாக விழுந்தது. இன்னொரு பெண் ஜவுளிக் கடையில் தரப்படும் கட்டைப் பையை காலியாக வைத்துக்கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

நான் கூட்டத்தை நெருங்கியதும், ஒருவர் இந்தா சார் வந்திருக்காரு.. கொஞ்சம் விலகுங்கம்மா என்றார். நான் மெல்ல எட்டிப் பார்த்தேன். பார்த்ததும் எனக்குப் பகீரென்றது.

சுமார் மூன்று மாதமே ஆன பச்சிளம் பெண் குழந்தை. கையைக் காலை அசைத்து அழத் திரானியில்லாமல் முழித்துக் கொண்டிருந்தது.

'சண்டாளி எப்படித்தான் மனசு வந்துச்சோ!'

'எப்படிப் பிள்ளையைப் பெத்தாளோ, இப்படிக் கட்டைப் பையில போட்டு சந்துல எறிஞ்சிட்டுப் போயிருக்கா.. எறும்பு மொச்சு கடிச்சிருந்தா எப்படித் துடிச்சிருக்கும் இந்தப் பச்ச மண்ணு.'

இங்கே எந்தப் பெண்ணும் பொம்மையல்ல, இவள் ஒரு ப்ரக்ருதி! எனும் எழுத்தாளர் வாசந்தியின் வைர வரிகள் நினைவுக்கு வந்தது.

கூட்டத்தில் ஒரு பெண் 'எனக்குப் பிள்ளை இல்லை, இந்தப் பிள்ளையை நான் எடுத்து வளர்த்துக்கறேன்' என்று கேட்டுக் கொண்டிருந்தார். 'இரும்மா.. நாட்டாமை வரட்டும்.. சொல்லிட்டுக் கொண்டு போ' என்று தலையாரி பதிலளித்துக் கொண்டிருந்தார்.

●

பெண் ஒரு புதிர்! பெண் ஒரு பேதை! பெண் ஒரு போகம்! பெண் ஒரு சுகம்! பெண்ணில்லையேல் ஏதும் இல்லை! பெண்ணில்லையேல் வாழ்க்கை இல்லை! பெண்ணில்லையேல் மனித உயிர்கள் இல்லை! இந்தப் பிரபஞ்சத்தில் பெண்ணில்லையேல் எதுவுமில்லை! ஏன், பெண்ணே ஒரு பிரபஞ்சம்தானே! என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது கவிஞர் பெருமக்களால்.

இருப்பினும் பெண்ணின் வாழ்க்கை என்பது சுலபமானதல்ல. அடுக்களைக்கும், படுக்கையறைக்கும் மட்டுமே பெண்கள் என்று பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழகிவிட்ட இனம் மனித இனம். அதற்கேற்றார்போல் உடலளவில் பல பலவீனங்களையும், இயலாமைகளையும் கொண்டதே பெண் ஜென்மம்.

இன்பத்துப் பாலில் வள்ளுவர் இருநூற்றைம்பது குறள்களைச் சொல்லியுள்ளார் பெண்ணுடனான காதலைப் பற்றி. இல்லறத்தைப் பற்றி, வாழ்க்கைத் துணைநலம் பற்றி, மக்கட்பேறு பற்றி மூன்று அதிகாரங்களில் சொல்லப்பட்டிருப்பதும் பெண்ணுடன் வாழும் வாழ்க்கையைப் பற்றித்தான்.

ஆண்களைச் சார்ந்து வாழ்வதுதான் பெண்களின் வாழ்க்கை என்பது அழுத்தமாகச் சொல்லப்பட்டு விட்டது பன்னெடுங் காலமாக. இத்தனை சம்பிரதாயங்களையும் தகர்த்தெறியும் வண்ணமாக பெண்களிலும் மாபெரும் மேதைகளும், தியாகிகளும், வீராங்கனைகளும் உருவானார்கள் என்பதுதான் சரித்திரம்.

ஆண்களின் சாதனைக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது சத்தியமான உண்மை என்றாலும், பெண்களே சாதனையாளர்களாக இடம்பெறுவதென்பது இந்தியாவிற்கு மட்டுமல்ல ஏன் உலகிற்கே பெருமை தரும் விசயம்தானே!

●

பெண்கள் வளர்ந்து சிறப்புச் செய்ய வழிகள் பல இருந்தும், இன்னும் பெண் சிசுக் கொலை தொடர்வது வேதனைதான். பெண் குழந்தை பிறந்துவிட்டால் வளர்க்க வழியின்றி, அரசுத் தொட்டிலிலோ, அனாதை இல்லங்களிலோ, இப்படித் தெருவிலோ விடுவதற்கு முடிவேயில்லையா? என்ன கொடுமையிது!

கண்கள் பனிக்க, கால்கள் தளர கனத்த மனத்துடன் வீட்டிற்குத் திரும்பினேன், என்னுடைய மூன்று பெண் மக்களை நினைத்துக் கொண்டே..!

●

## திருமங்கலம் நகரில் மகாகவி வாசகர் வட்டம் உதயம்




மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் மகாகவி வாசகர் வட்டம் 28-06-09 அன்று உதயமானது. கூட்டத்தினை திரு. அ. தமிழ்ச்செல்வன், திரு. கிருஷ்ணக்குமார் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மகாகவி ஆசிரியர் வதிலைபிரபா வாசகர் வட்டம் செயல்பாடுகள் குறித்துப் பேசினார். இதழ் ஓவியர் ஜெ. சுதாகர், முத்துப்பாண்டியராஜா, விஜயராஜ்காந்தி, இரா. காசிப்பாண்டியன், நாகேஸ்வரன், செ. சந்திரமோகன் கலந்து கொண்டனர். கிளையை விரிவு படுத்துவது - புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

## வத்தலக்குண்டு நகரில் மகாகவி வாசகர் வட்டம் - புதிய நிர்வாகிகள்



வத்தலக்குண்டு நகரில் மகாகவி வாசகர் வட்டக் கூட்டம் 05-07-09 அன்று டால்பீன் கம்ப்யூட்டர்ஸ் வளாகத்தில் நடை பெற்றது. கூட்டத்திற்கு வாசகர் வட்டத் தலைவர் பொன். அண்ணாத்துரை தலைமை தாங்கினார். அமைப்பாளர் சொ. இராசாமணி (எ) எழிலரசு வரவேற்றார். செயலாளர் மோகன்தாஸ், வதிலைபிரபா, நகரவங்கி இராதாகிருஷ்ணன், முனைவர். சுவாதி ச. முகில், வாழைகுமார், எழுத்துப்பட்டறை நா. நாகேந்திரன், வெ.பெ. பிச்சைமணி, எழுத்துப்பட்டறை முகமதுநாசர் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் செயலாளர் மோகன்தாஸ் நன்றி கூற நிகழ்வு இனிதே முடிவுற்றது.

வத்தலக்குண்டு

## மகாகவி வாசகர் வட்டம் புதிய நிர்வாகிகள்

தலைவர் :
பொன். அண்ணாதுரை

அமைப்பாளர் :
சொ. இராசாமணி (எ) எழிலரசு

துணைத் தலைவர்கள் :
மை. பாரதி ஆரோக்கியராஜ்
டி. வாமணன்

செயலாளர் :
சி. மோகன்தாஸ்

பொருளாளர் :
செ. விஜயப்பிரகாஷ்

செயற்குழு :
சுகி
வெ.பெ. பிச்சைமணி
எஸ். முகமது நாசர்
நா. நாகேந்திரன்
முனைவர். சுவாதி ச. முகில்

திண்டுக்கல்
மேற்கு ரோட்டரி சங்கம் நடத்திய

## பத்திரிக்கை மாதம்

*19-4-2009* அன்று திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கம் சார்பாக R.K.G. கங்காதரன் ரோட்டரி ஹாலில் 'பத்திரிக்கை மாதம்' நிகழ்ச்சி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் கவிஞர். வதிலைபிரபா கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். சங்கத் தலைவர். Rtn.PHF.G. கோபாலகிருஷ்ணன், செயலர் Rtn.PHF.V.ராஜ்குமார், இயக்குநர் சமுதாய சேவை Rtn.PHF. S.S.மோகன்ராம், எழுத்தாளர் கமலவேலன், தென்றல் இதழாளர் Rtn.PHF.A.இருதயராஜா மற்றும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## ஹைகூப் பூக்கள்



அவசியம் தேவை
ஆழ்குழாய் கிணறுகள்
குழந்தைகள் பத்திரம்.

இளமையில் கல்
முதுமையில் கழிவு
நடுவில் நடுகல்.

எப்படி அழைத்தும்
வராத காக்கைகள்
மாமியாரின் திவசம்.

வீக்கம் குறையவில்லை
விளைந்ததை விற்றும்
கடனுக்கான வட்டி.

பூமியில் மின்ன
சாளர வெளிச்சமாய்
என்னவள் பார்வை.

மறுபடியும் தழைத்தது
மானாவாரிப் பயிர்கள்
விதவையின் திருமணம்.

வீரர்களின் மோதல்
விழுந்தது கண்ணீர்
இடியும் மின்னலும்.

**- கோவை கோகுலன்**

### வருந்துகிறோம்

இனிய நண்பர் - அன்னை ராஜேஸ்வரிபதிப்பகத்தின் உரிமையாளர் கவிஞர். பா. உதயக்கண்ணன் அவர்களின் அன்புத் தகப்பனார் திரு. P.K. பார்த்தசாரதி அவர்களின் மறைவுக்கு மகாகவி - உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் தமது வருத்தத்தினைப் பதிவு செய்கிறது.




*'மகாகவி மிகப்பெரிய கவனிப்புக்குரிய இதழாயிருக்கிறது..*

வண்ணமயமான பேரழகுடன் மகாகவி. கண்ணுக்குக் குளிச்சி. கவிவேந்தர் கா.வேழவேந்தன் அவர்களின் 'சிரிப்பூ' உண்மையில் கவித்துவம் நிறைந்த பேரழகு. அழகியல் சொற்களால் கற்பனை வளமைப் புதுமையுடன் எழுப்பப்பட்ட அழகு மாளிகை. விக்ரமாதித்யனின் 'விசித்திரசித்தன்' என்ற கவிதை நவீனத்துவத்தின் உச்சம். உடல்மொழி பற்றியும் புதுப்பெண் கவிஞர்கள் புயலெனப் புறப்பட்டிருக்கிற தற்காலச் சூழலில் முனைவர். மு. குருவம்மாள் அவர்களின் தத்துவபலமிக்க மரபுக் கவிதை. சத்தியக் குரலாக - பண்பாட்டுக் குரலாக இவரது கவிதையை நவீனக் கவிஞர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்களோ? 'மகாகவி' மிகப் பெரிய கவனிப்புக் குரிய இதழாயிருப்பதுவும், நிதியுதவி பெற்றிருப்பதுவும் வாழ்த்துக்குரியது.

**- மேலாண்மை பொன்னுச்சாமி,** மேலாண்மறைநாடு.

*உங்கள் பத்திரிக்கைக்குக் கிடைத்த பெருமை..*

மைசூர் 'இந்திய நடுவண் மொழிகள் நிறுவனம்' 'மகாகவி' இதழுக்கு நிதியுதவி அளித்துள்ளது என்ற பெருமையான செய்தியறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். பத்திரிக்கை சிரமமின்றி சற்று பீடுநடைபோட இந்த உதவி பயன்படும் என நம்புகிறேன். இது உங்கள் பத்திரிக்கைக்கு கிடைத்த பெருமை. கௌரவ மாகக் கருதுகிறேன். பெயர்தான் சிறுபத்திரிக்கையே தவிர பெரிய பத்திரிக் கைகளை விட சிறப்பாக வெளியிடுகிறீர்கள்.

**- தீபம். எஸ். திருமலை,** சென்னை.

*எல்லாம் முடிந்துவிட்டதே தோழா..*

கவிவேந்தர் கா. வேழவேந்தனின் 'சிரிப்பூ' சிறப்பு. மனிதருக்கு சிரிப்பு எத்தனை அவசியம் என்கிறது. 'கண்ணனாக மாறிய குகன்' மூலம் ஓர் அழகான ஆய்வுரையை நிகழ்த்தியுள்ளார். குகன் எப்படி கண்ணன் ஆனான் என ஆய்ந்தளித்துள்ளார். 'எரியும் நெருப்பில் துளிர்க்கும் வாழ்வு' -ஐக் கவிதையால் சுட்டியுள்ளார் சந்திராமனோகரன். சொற்களில் தொடங்கிய நகரவங்கி இராதாகிருஷ்ணன் கட்டுரை திருக்குறளில் முடிந்துள்ளது. குறள் பெருமை பேசியுள்ளது. சிங்களத்தவரைத் தோழர் என செல்லமாக அழைத்து 'தமிழர்களைக் கொல்லும் எண்ணத்தை மாற்று' என்று வேண்டுகேள் விடுத்துள்ளார் கே.வி. சனார்த்தனன். எல்லாம் முடிந்துவிட்டதே தோழா.

**- பொன். குமார்,** சேலம்.

*அலுப்பும் சலிப்புமே விஞ்சுகிறது..*

உள் முன்பக்கம் உள்ள வேழவேந்தன் அவர்களின் கவிதையும், பின்புறம் உள்ள சுதாகர் கட்டுரையும் தவிர பிற படைப்புகளில் சுயம் என்பதே சுத்தமாக இல்லை. தயாரிப்புகள் அற்ற ஒரே அலுப்பும் சலிப்புமே விஞ்சுகிறது. (தரம் தரமில்லை என்பதை நாணிங்கு உரைக்கவில்லை.)

**- ஹரிகிருஷ்ணன்,** ஏர்வாடி.

---

**இதழ் வளர்ச்சிக்கு சந்தா, நன்கொடை அனுப்பி உதவுங்கள்**

புரவலர் : ரூ.3000/- ஐந்தாண்டுச்சந்தா : ரூ. 300/- ஆண்டுச்சந்தா : ரூ. 60/-

---

படைப்பாளர்கள் பிரதியெடுத்துக்கொண்டு படைப்புக்களை அனுப்பவும்.

# இந்தக் காலச் சூழலில் பெரும்பாலும் எழுத்த நம்பி யாரும் இருக்க முடியாது!



சந்திப்பு : வி. ஷா நவாஸ்கான்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தைச் சொல்லுங்களேன்!**

*நான் இலங்கையிலிருக்கிற வவுனியாவுக்குப் பக்கத்திலிருக்கிற கோவில்புதுக்குளம் எனும் ஊரில் பிறநதேன். அங்கு 4 -ஆம் வகுப்பு வரை படித்தேன். என்னுடைய 11 -ஆம் வயதில் இந்தியாவுக்கு புலம் பெயர்ந்தோம். என்னுடைய மூதாதையர் எல்லாம் இலங்கை யிலிருந்து வந்தவங்கதான். திருச்சி பகுதியிலிருக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கான தங்குமிடம் உயர்நிலைப் பள்ளியில் 10 -ஆம் வகுப்பு வரை படித்தேன். பின்னர் திருவெறும்பூரில் உள்ள தொழிற்கல்வி பயிற்சியகத்தில் தொழிற்கல்வி பயின்றேன். இங்கு தான் என்னுடைய இலக்கிய ஆர்வம் தொடங்கியது.*

*ஒரு தனியார் நிறுவனத்தில் ‘விற்பனைப் பிரதிநிதி’ யாக என்னுடைய பயணத்தைத் தொடங்கிய போது, எனக்கு படிக்கும் ஆர்வம் நிறைய இருந்தது. அதன்பிறகு பத்திரிக்கைத் துறைக்கு என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்.*

**உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கப் பொருளாளரும், ‘இனிய நந்தவனம்’ இதழாசிரியருமான கவிஞர். நந்தவனம் சந்திரசேகரன் மூன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின் தொகுப்பிது.**

**இலக்கியத்தின் மீது உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?**

*என்னுடைய தமிழாசிரியர் புலவர் தியாகசாந்தன். அவர்தான் எனக்கு தமிழ் உணர்வூட்டி தமிழ் சொல்லிக் கொடுத்தார். நிறைய வாசிக்கச் சொல்லியது, கவிதை எழுத வைத்தது, கட்டுரை எழுத வைத்தது எல்லாம் அவர்தான். அவர் தொடங்கி வைத்த பயணத்தை நான் அப்படியே தொடர்ந்திட்டிருக்கிறேன்*

**உங்களுடைய முதல் கவிதை எது?**

திருச்சியிலிருந்து 'வீணை' எனும் சிறு பத்திரிக்கையில் வந்தது. முதல் கவிதை காதல் கவிதையாகத் தான் வந்தது. ஒரு போட்டி நடத்துனாங்க. 'காகிதக் கப்பல்' எனும் தலைப்பில் போட்டி வெச்சாங்க.

**கவிதை எழுதி / காதலியிடம் கொடுத்தேன்**
**காகிதத்தை கப்பலாக்கி / தண்ணீரில் ஓடவிட்டாள்**
**என் கன்னத்தை / கண்ணீரில் ஓடவிட்டாள்.**

இதுதான் என்னுடைய முதல் கவிதை. முதன் முறையாக பத்திரிக்கையில் பார்த்தவுடன் நம்மளும் ஒரு கவிஞனாகிட்டோம் என்கிற மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒரு துள்ளல் ஒரு சந்தோசம் வந்துச்சு. அதன் பிறகு நிறைய வாசிக்க ஆரம்பிச்சேன். மு. மேத்தா, வைரமுத்து, அப்துல்ரகுமான் கவிதைகளெல்லாம் படிக்க ஆரம்பிச்சேன். கவிதைன்னா நிறைய தெரிஞ்சுக்கணும் அப்படீங்கிறதுக்காக ஒரு ஆண்டு இரண்டாண்டு என வாசிப்பில் இருந்தேன். அதன்பிறகு என்னுடைய கவிதைகளை வணிகப் பத்திரிக்கைகள், சிறுபத்திரிக்கைகள் என நிறைய எழுதி 97 -ல் கூட என்னுடைய காகிதப்பூவில் தேன்துளிகள் எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக் கிறேன். ஹைகூ கவிதைகள் நிறைய எழுதியிருக்கிறேன். அந்த ஹைகூக் கவிதைகளை தொகுத்து நூலாக வெளியிட ஏற்பாடு செய்து வருகிறேன். 'வண்ணத்துப் பூச்சிகளின் மீது நத்தைக் கூடுகள்' - கவிதைத் தொகுப்போட தலைப்பு. அடுத்து காதல் கவிதைகளை மட்டுமே கொண்டு 'பொய்யாவது சொல்' அப்படீங்கிற தலைப்புல புத்தகம் தயார் பண்ணிட்டிருக்கிறேன்.

என்னுடைய அடுத்த முயற்சி சிறு பத்திரிக்கை தொடங்குறதுல தான் இருந்தது. நான் பத்திரிக்கையில எழுதத் தொடங்குனப்போ நிறைய தோல்விகளச் சந்திச்சிருக்கேன். நிறைய எழுதி அனுப்புவேன். வராது, அவங்க திருப்பி அனுப்புவாங்க. அதுல எனக்கு நிறைய பாதிப்பு இருந்துச்சு. ஏன் நம்ம கவிதைகள எடுத்துக்க மாட்டேன்கிறாங்க, நமக்கு அதற்குத் தகுதியில்லையா எனத் தோன்றும். அப்புறம் நம்ம கவிதைகள் வர ஆரம்பிச்ச போது என்ன மாதிரி எத்தனையோ பேர் பாதிச்சிருப்பாங்க. அவங்களுக்கு ஒரு தளம் அமைச்சுக் கொடுக்கணும் என இந்த இனிய நந்தவனம் என்கிற பத்திரிக்கையை ஆரம்பிச்சேன். 97 -ல்ல தொடங்கினேன். இப்ப உலகம் முழுவதும் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் 'இனிய நந்தவனம்' செல்கிறது.

**நந்தவனம் தொடங்கியபோது நீங்கள் எந்தமாதிரியான நெருக்கடிகளைச் சந்தித்தீர்கள்?**

முழுக்க முழுக்க பொருளாதார நெருக்கடிகள்தான். படைப்பாக்கத்துல நெருக்கடியோ, மக்கள்கிட்ட கொண்டுபோறதிலேயோ நெருக்க டியோ இல்லை. முதன்முதல்ல 4 பக்கத்துலதான் இதழ தொடங்கினேன். இன்னைக்கு 50 பக்கம் 100 பக்கம்னு இதழ் வெளியிடுறேன். நண்பர்களோட கவிதைகளத்தான் முதல்ல வெளியிட்டேன். இப்போ நிறைய நண்பர்களை அறிமுகப்படுத்தி

வருகிறோம். சுமார் 50 -க்கும் மேற்பட்ட வெளிநாட்டு நண்பர்க ளோட நேர்முகத்தை, முகப்பு அட்டையில அவங்க படத்த போட்டு வெளியிட்டிருக்கோம்.

**இன்றைய இளைஞர்கள் மத்தியிலே இலக்கியத்திற்கு அதிக ஆர்வம் இல்லைங்கிற ஒரு கருத்து நிலவுதே? அதை நீங்க எப்படிப் பார்க்குறீங்க!**

கல்வி, வேலைவாய்ப்பு அப்படீன்னு இளைஞர்கள் இருந் தாலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கண்டிப்பாக இலக்கிய தாகம் இருக்கிறது. அவருடைய சூழல், வாழ்க்கைச் சூழல் பொருளாதா ரத்தைத் தேடறதுனால அதை நோக்கிய பயணம் அதிகமா செய்யறது னால இடையிலதான் இந்த இலக்கியம் செய்யவேண்டி இருக்கிறது. ஆனா படிக்கிறாங்க. வாசிப்பு இளைஞர்கள் மத்தியில இருக்குது. ஆனா அவங்க பொருளாதார தேடல் மட்டுமே முக்கியம் என்று போறதுனால இத கொஞ்சம் ஓரங்கட்டி விட்டு ஒரு பொழுதுபோக்கு, நேரங்கிடைக்கும்போது மட்டுமே பண்றதுன்னு வெச்சிருக்காங்க. ஆனா முழுக்க முழுக்க இலக்கியத்தை ஒதுக்குறாங்கன்னு சொல்ல முடியாது. ஆனால அதுக்குள்ள இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர் கள் கவிதை எழுதுகிறார்கள். கல்லூரி மாணவர்கள், படித்து வெளியே சென்றவர்கள், ஆசிரியப் பெருமக்கள், வேறு நிறுவனத்தில் பணி புரிபவர்கள் எல்லாவற்றிலுமே கவிஞர்கள் இருக்கிறார்கள், எழுத்தாளர் கள் இருக்கிறார்கள். இந்தக் காலச் சூழலில் பெரும்பாலும் எழுத்த நம்பி யாரும் இருக்க முடியாது. அத ஒரு பகுதிவேலையாகத்தான் பண்ணிக்க முடியுது. வேறு நிறுவனத்திலேயோ, வேறொரு இடத்தி லேயே பணியாற்றிக்கொண்டு வாழ்க்கைக்கான வருமானம் தேட வேண்டும். பாரதிதாசன்கிட்ட நான் கவிதை எழுதப்போறேன் அப்ப டீன்னு போகும் போது ‘கவிதை எழுதுறப்பா வயிற்றுப்பாட்டுக்கு என்ன பண்ற’ அப்படீன் பார். எனவே பசி அதற்கு பொருளாதாரம் தேட வேண்டும். அதன்பிறகுதான் இலக்கியம் செய்யவேண்டும், செய்யணும் அப்படீங்கிறதுதான் என் கருத்து.

**சிற்றிதழ்களோட வளர்ச்சி எப்படி இருக்கு?**

இன்றைய காலத்தில் சிற்றிதழ்களின் வளர்ச்சி மிக நன்றாகவே இருக்கிறது. இன்று வணிக இதழ்கள் வணிகத்தனமாகத்தான் போய்க் கொண்டு இருக்கிறது. இன்றைய செய்தி இன்று காலையில் வந்தால் மாலையில் முடிந்து போய்விடுகிறது. சிற்றிதழ்களில்தான் காலங் கடந்து பேசப்படுகிற நல்ல இலக்கியம், நல்ல கருத்து இருந்து வருகிறது. அதை விரும்பக்கூடிய மக்கள் இருக்காங்க. நூற்றுக்கு எண்பது சதவீதம் மக்கள் விரும்பறாங்கன்னே சொல்லலாம். இன்று குக்கிராமத்திலே கூட சிற்றிதழ்கள் வந்துகொண்டு இருக்கு. சிற்றிதழ் களுக்கு ஆதரவு இருக்கிறதுனால தான் இந்த இதழ்கள் வந்துகொண்டு இருக்கு. அதுக்காகத்தான் நாங்க உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்னு வெச்சிருக்கோம். அதுல நான் பொருளாளரா இருக்கேன். நண்பர் கவிஞர். வதிலைபிரபா தலைவராக உள்ளார். அவர் ‘மகாகவி’

நன்றி. ஏழன் டீனி

எனும் சிற்றிதழை நடத்தி வருகிறார். சென்னையிலே ‘கல்வெட்டு பேசுகிறது’ இதழ் நடத்துகிற கவிஞர். சொர்ணபாரதி பொதுச் செயலாளரா உள்ளார். இந்த சங்கத்துல நூற்றுக்கணக்கான இதழ்கள் உறுப்பினராக இருக்கின்றன. அவர்களுக்கான நல்ல ஆலோசனை களைச் சொல்லி இந்த சிற்றிதழ்களை எப்படி வளர்ச்சிப் பாதையிலே கொண்டுசெல்லணும்னு சொல்லி ஊக்கப்படுத்தி வருகிறோம்.

**நீங்க ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கீங்க? இந்த அமைப்பின் மூலமா உங்க செயல்பாடுகள் என்ன? எந்த அளவுக்கு சிற்றிதழ் களை வளர்ப்பதற்கு செயல்படுகிறது?**

*அமைப்பின் சார்பாக ஒரு சிற்றிதழை எப்படி வளர்ப்பது என்று வழி நடத்துகிறோம். ஆண்டுக்கு ஒருமுறை நாங்க மாநாடு நடத்துகிறோம். இப்ப நான்கு மாநாடுகளை முடிச்சிருக்கிறோம். அந்த மாநாட்டுல நலிவ டைந்த சிற்றிதழ்களுக்கு ஊக்கத்தொகை வழங்குகிறோம். சிறப்பாக நடத்தி வருபவர்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்கத்தொகையும் வழங்கி வருகி றோம். முதலில் 5 பேருக்கு வழங்கினோம். பின்னர் 7 பேருக்கு வழங்கி னோம். அதன்பின் 11 பேருக்கு வழங்கினோம். அடுத்த ஆண்டு 20 பேருக்கு வழங்க உள்ளோம். அரசுப் பதிவுக்கான வழிகளில் என்ன செய்ய லாம்? அஞ்சல் சலுகைகளுக்கான வழிகளில் என்ன செய்யலாம்? என்கிற ஆலோசனைகளை வழங்கி அவர்களை ஒருங்கிணைத்து வருகிறோம்.*

**இந்த அமைப்பு தொடங்கியபின் சிற்றிதழ்களின் எண்ணிக்கை ஏதேனும் கூடியிருக்கா? அல்லது அதில் ஏதேனும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கா?**

*கூடியிருக்குன்னே சொல்லலாம். புதிய புதிய சிற்றிதழ்கள் உருவாகி வருகின்றன. எங்க சங்கத்தினுடைய வழிகாட்டல் மூலமா நிறைய பேர் அனுபவங்கள தெரிஞ்சுக்கிறாங்க. நாங்க கொடுக்கிற ஆலோசனை மூலமா படைப்பாளரா இருக்கிறவங்ககூட பத்திரிக்கையாளரா மாறி வர்றாங்க. மாதம் ஒரு பத்திரிக்கையாவது புதிதாக தொடங்கிவிடுறாங்க.*

**சிற்றிதழ்கள் என்ன மாதிரியான விசயங்களை மையப்படுத்தி இருக்கு?**

*இனிய நந்தவனத்தைப் பொருத்தவரை மக்கள் மேம்பாட்டுக் கருத்துக்களை மையப்படுத்தி கொண்டு செல்கிறோம். ஒரு மனிதன் வாழ்க்கையில் எப்படி மேம்படனும், அதற்கு என்னென்ன ஆலோசனை தேவை என்பதை மையப்படுத்திக் கொண்டு செல்கிறோம். இதில் கொஞ்சம் இலக்கியம், கவிதை, நேர்காணல், சுய முன்னேற்றக் கட்டுரை கள்னு இடம்பெறுது.*


**அரசாங்கம் எந்த அளவுக்கு சிற்றிதழ்களுக்கு அங்கீகாரம் வழங்கி யிருக்குன்னு நினைக்கிறீங்க?**

*அரசாங்கம் எங்களுக்கு பத்திரிக்கை பதிவு கொடுத்திருக்காங்க. அதுதவிர அஞ்சல் சலுகை கொடுத்திருக்காங்க. மற்றபடி வேறு சலுகை கள் எங்களுக்கு கொடுக்கவில்லை. வணிக இதழ்களுக்கு கோடிக்கணக் குல விளம்பரம் கொடுக்கிறாங்க. எங்களுக்கு கொஞ்சம் சிறிய அளவு*

ஒரு பக்கம் விளம்பரம் கொடுத்தாங்கன்னா தொடர்ந்து தொய்வில்லாம உயிரோட்டமா போகும். ஆனா அரசு செய்யமாட்டேங்கறாங்க. ஆனா புதுச்சேரில சிற்றிதழ்களுக்கு விளம்பரம், பரிசுகள் மற்றும் தொடர்ந்து 25 ஆண்டுகள் இதழ் நடத்தியிருந்தா ஊக்கத்தொகை என நிறைய செய்யறாங்க. இங்க அத செய்யறதுல கொஞ்சம் சிரமம் இருக்கு. இங்க சிற்றிதழ்களோட எண்ணிக்கை அதிகம். ஆனா அரசாங்கம் மனசு வச்சா செய்யலாம். அதற்கான முயற்சிகளில எங்க சங்கம் ஈடுபட்டிருக்கு. எங்க கோரிக்கைகள தொடர்ந்து முன்வெச்சுக் கிட்டு வற்றோம். எங்களுக்கு விளம்பரம் கொடுத்தாக்கூட போதும். ஏன்னா விற்பனை ரீதியா சிற்றிதழ் களுக்கு பெரிசா ஒண்ணும் இல்ல. சந்தாதாரர்கள், வாசகர்கள வெச்சுதான் சிற்றிதழ்களை நடத்தவேண்டி இருக்கு. பொருளாதாரச் சிக்கல் நிறைய இருக்கு. விளம்பரங்கள வணிக இதழ்களுக்கு கொடுக்கற மாதிரி சிற்றிதழ் களுக்கு கொடுக்க மாட்டாங்க. ஏன்னா நல்ல விசயங்களுக்கு எப்போதும் ஆதரவு குறைவாத்தான் இருக்கும். அட்டைப் படத்துல ஒரு சினிமா நடிகை யோட கவர்ச்சிப் படத்தையோ அல்லது ஒரு சர்ச்சை உள்ள செய்தி யையோ போட்டோம்னா நல்லா விற்பனையாகும். இப்பல்லாம் நெகடிவ் ஆன செய்திக்குத்தான் முக்கியத்துவம் கிடைக்கிறது. நல்ல விசயங்கள மக்கள் ஏத்துக்க மாட்டேன்கிறாங்க. ஆனா சிற்றதழ்கள்ல வாழ்க்கை மேம்பாட்டுக் கான செய்திகள் இருக்கிறதுனால கொஞ்சம் கொஞ்சமா போனாலும் மக்கள் மத்தியில நல்லாத்தான் போய்க் கிட்டு இருக்கு.

**பொருளாதார நெருக்கடியில சிற்றிதழ்கள் நின்று போனதற்கான எண்ணிக்கை எவ்வளவு என்று எஸ்டிமேட் ஏதும் பண்ணியிருக்கீங்களா?**

சில சிற்றிதழ் ஆசிரியர்கள் தங்களுடைய பொருளாதாரம் முழுவதுமே இழந்திருக்கிறார்கள். ஒரு சிற்றிதழ் ஆசிரியர் வேடிக்கை யாகக் கூறுவார். நான் முதல் இதழ் வெளியிடும்போது என் மனைவி யோட மோதிரத்தை அடகு வெச்சேன். இரண்டாவது இதழ் வெளி யிடும்போது என்னுடைய மனைவியோட செயினை அடகு வெச்சேன். மூன்றாவது இதழ் வெளியிடும்போது என்னுடைய மகளோட கொலுசு காணாம போச்சு. இந்தமாதிரி சொந்த பணத்தைச் செல விட்டு வெளியிடுபவரும் இருக்காங்க. அதுமாதிரி அரசாங்கத்துல பணியாற்றி ஓய்வு பெற்றபின் ஓய்வுப் பணத்தை வெச்சி இதழ் நடத்துற வங்களும் இருக்காங்க. இவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் சிற்றிதழ் கள் வந்துக்கிட்டுதான் இருக்கு. புதிது புதிதாக வந்துக்கிட்டிருக்கு. இது ஒரு இலக்கிய தாகம். இந்த சமுதாயத்திற்கு நம்மளும் ஏதாவது சொல்லணும் அப்படீங்கறதுனால இந்த சிற்றிதழ் நசுங்கிப்போனா லும் மீண்டும் மீண்டும் வந்துக்கிட்டிருக்கு. ஒரு பக்கம் மடிந்து போனாலும், இன்னொரு பக்கம் முளைத்து வந்துக் கிட்டுதான் இருக்கு. இந்த பயணம் போய்க்கிட்டேதான் இருக்கும். ●




**– புலவர். ப. தேவகுரு**

வாய்மைக்கு நித்தமும் முதன்மை தந்து,
வீண்சினத்தை அடியோடு குறைத்துக் கொண்டு,
தூய்மைவழி தொடர்ந்துமே துணையாய்க் காட்டி,
தானென்ற ஆணவத்தை நீக்கி நின்று,
ஏய்ப்போராய் இல்லாமல் இயல்பு பெற்று,
இடர்கொடுக்கும் பகைவருக்கும் நன்மை செய்து
வாய்த்தபணி தெய்வமாக கருதி வந்தால்
வந்திடுமே ஒளிமயமான எதிர் காலம்!

உண்மையால் உயர்வுண்டாம் என்றே எண்ணி,
உழைப்பையே நிலைத்துநிற்கும் செல்வ மாக்கி,
நன்றிதன்னை காக்கின்ற எண்ணங் கொண்டு,
நீதிவழி நிலையாக்கி என்றும் வாழ்ந்து,
துன்பத்தை எதிர்த்துமே சிரித்து நின்று,
துவளாத திடத்தோடு தொண்டு செய்து,
பண்பட்ட வாழ்க்கையது அமைத்துக் கொண்டால்
பார்த்திடலாம் ஒளிமயமான எதிர் காலம்!

பற்றற்று வாழ்ந்துவந்தால், என்றும் எங்கும்
பண்பறப் பாதைகண்டால், மனித நேயம்
வற்றாமல் பெருகவைத்தால், நட்பு போற்றி
வஞ்சகங்கள் பிரித்தெடுத்து புதைத்து விட்டால்,
தொற்றிடும் தீயசக்தி அழித்து விட்டு
தூயசக்தி இணைந்துவரும் இயல்பு கண்டால்,
மற்றவர்கள் மனங்குளிர நடந்து வந்தால்
வருகைதரும் ஒளிமயமான எதிர் காலம்!

## தமிழக குறும்பட - ஆவணப்படவிழா



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்-வெங்கடாஸ்திரிகோட்டை கிளை 17-05-09 அன்று தமிழக குறும்பட ஆவணப் பட விழாவினை சின்னுபட்டி A.M.S. மெட்ரிக் பள்ளியில் சிறப்பாக நடத்தியது. தமுஎச மாவட்டச் செயலாளர் ச.சிவக்குமார் தலைமையில் நடந்த விழாவினை A.M.S. மரியலூயிஸ் துவக்கி வைத்தார். முன்னதாக அய்யனார் மூர்த்தி வரவேற்றார். தமுஎச மாவட்டத் தலைவர் R.S.மணி, மாவட்டப் பொருளாளர் இராசேந்திரன் முன்னிலை வகித்தனர். உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் வதிலைபிரபா வாழ்த்துரை வழங்கினார்.

மாலை நிகழ்வில் 'நிழல்' திரைப்பட இயக்கம் நிழல் திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். முன்னதாக செ. செந்தில் வரவேற்றார். காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர். மு.குருவம்மாள் சிறப்புரை நிகழ்த்தினார். பதியம் திரைப்பட இயக்கம் பாரதிவாசன் வாழ்த்துரை வழங்கியதோடு நிகழ்ச்சியை தொகுத்து அளித்தார். கிளைச் செயலாளர் வாழை குமார் நன்றி கூற விழா நிறைவு பெற்றது.

**கந்தகப் பூக்கள் இலக்கிய அமைப்பு மற்றும் நீலநிலா இதழ் குழுமம் நடத்தும்**
**2008 -ஆம் ஆண்டில் வெளியான**

### கவிதை & சிறுகதை நூல்களுக்கான போட்டி.

- முதல் பரிசு : ரூ 1000/-
- 2 -ஆம் பரிசு : ரூ 500/-
- ஆறுதல் பரிசு : புத்தகங்கள் 15 நபர்களுக்கு

**விதிமுறைகள் :**

- நூல்கள் 2 படிகள் அனுப்ப வேண்டும்.
- நூல்கள் 31-08-2009 -க்குள் கிடைக்க வேண்டும்.
- எழுத்தாளர்கள் சுயவிபர குறிப்பைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.
- சிறுகதை நூல்களுக்கான போட்டிக்கு அனுப்பும் தொகுப்பில் எழுத்தாளருக்குப் பிடித்த சிறந்த 3 கதைகளைக் குறிப்பிட வேண்டும்.
- 2008 -ஆம் ஆண்டில் வெளியான தொகுப்புகள் மட்டும் பரிசீலனை செய்யப்படும்.
- கையெழுத்துப் பிரதிகளும், (புத்தக வடிவில் 96 பக்கங்களுக்குக் குறையாமல்) ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

கந்தகப்பூக்கள் ஸ்ரீபதி, 218, பத்ரகாளியம்மன் கோவில் சாலை, சிவகாசி - 626 123.

# இலங்கையில்
# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கக் கிளை



உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கமும், திருச்சி படைப்பாளர் பட்டறையும் இணைந்து 19-06-09 அன்று படைப்பாளர்கள் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஈழத்து மூத்தப் பத்திரிக்கையாளர் சசிபாரதி சபாரத்தினம் தலைமையேற்க, இலக்கிய விமர்சகர் வி.நா.சோ. முன்னிலையில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இலங்கையிலிருந்து வருகை தந்தருந்த மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்கள் சிறப்பு வருந்தினராகக் கலந்து கொண்டார். ஈழத்தில் தற்போதைய நிலை குறித்தும் உரை நிகழ்த்தினார். மேலும் இலங்கையில் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் கிளை தொடங்குவதாகவும் அறிவித்தார்.

சங்கத்தின் தலைவர் வதிலைபிரபா, பொதுச்செயலாளர் சொர்ணபாரதி, பொருளாளர் நந்தவனம் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் இலங்கையின் முதல் உறுப்பினராக இணைந்த தோடு, அவர் வெளியிட்டு வரும் 'கொழுந்து' இதழை சங்கத்தின் உறுப்பிதழாக இணைத்துக் கொண்டார். மேலும் இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் ஜவஹர் ஆறுமுகம், சிற்றிதழ் சேகரிப்பாளர்கள் லயன். பட்டாபிராமன், தி.மா. சரவணன், தமிழகன், கவித்துவன், திருக்குறள் முருகானந்தம், கனடாவில் இருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் முத்துராஜா, இனிய நந்தவனம் நிர்வாக ஆசிரியர் சங்கீதா சந்திரசேகரன் பங்கேற்றனர்.

கரூர் நகரில் சிறப்பாக நடந்தது

# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்

## 5 -ஆவது தலைமை செயற்குழுக் கூட்டம்



*26-07-2009 அன்று காலை 11 மணி அளவில் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க 5 -ஆவதுசெயற்குழுக் கூட்டம் கரூர் நகர் புன்னம் சத்திரத்தில் அமைந்துள்ள சித்தார்த்தா முதியோர் இல்ல வளாகத்தில் சங்கத் தலைவர் வதிலைபிரபா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஈரோடு மாவட்ட அமைப்பாளர் சந்திரா மனோகரன், செயற்குழு உறுப்பினரும், மாநாட்டு அமைப்பாளருமான சொக்கம்பட்டி ரஹீம் முன்னிலை வகித்தனர். முன்னதாக சங்க பொதுச்செயலாளர் சொர்ணபாரதி வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கப் பொருளாளர் நந்தவனம் சந்திரசேகரன் இலங்கையில் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கக் கிளை குறித்து விளக்கம் அளித்தார். துணைப் பொதுச் செயலாளர் பாரதிவாசன், கருநாடக மாநில அமைப்பாளர் வே. அரசு, செயற்குழு உறுப்பினர் வாழைகுமார் தீர்மானங்கள் குறித்த விவாதத்தில் பங்கெடுத்து உரையாற்றினர். சிகரம் இணை ஆசிரியர் பழ. அன்பு நேசன், சிகரம் துணை ஆசிரியர் கடல்நேசன் மு. இராமலிங்கம் சிறப்புரையாற்றினர். முடிவில் சங்கப் பொருளாளர் நந்தவனம் சந்திரசேகன் நன்றி கூறினார்.*

*இருவேளையும் தேநீர் - பிஸ்கட் மற்றும் மதிய உணவும் தந்து நிகழ்ச்சி நடைபெற இடமும் தந்து உதவிய சித்தார்த்தா முதியோர் இல்ல பொறுப்பாளர் திரு. பழ. அன்பு நேசன், மற்றும் நிகழ்ச்சியைத் திட்டமிட்டு சிறப்பாக வடிவமைத்த சிகரம் இதழின் ஆசிரியர் சந்திரா மனோகரன் ஆகியோரை சங்கம் பாராட்டி மகிழ்ந்தது. முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களைச் சந்தித்தது - இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டது - இந்த நெகிழ்ச்சியான சம்பவங்கள் அனைவரையும் இறுகப் பற்றிக் கொண்டது.*

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

- 05-08-2009 அன்று கொழும்புவில் துவக்கப்படும் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் கிளைக்கு ஒப்புதல் வழங்கு வது. தெரிவு செய்யப்படும் புதிய நிர்வாகிகளை அங்கீகரிப்பது,
- குற்றாலத்தில் நடைபெற உள்ள மாநாட்டுக்கு வருகை தரும் இலங்கை கிளை நிர்வாகிகள் - உறுப்பினர்களை மகிழ்ச்சி யோடு வரவேற்பது.
- தொடர்ந்து தமிழ் அறிஞர்களின் நூல்களை நாட்டுடமையாக்கி வரும் தமிழக அரசுக்கும் - தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவிப்பது.
- தமிழக முதல்வரை சங்கத்தின் நீண்டகால கோரிக்கைகளுடன் தலைமை நிர்வாகிகள் அனைவரும் சந்திப்பது..
- இலங்கைத் தமிழர்களுக்கு முழு சுயாட்சி - சம உரிமை - சம அதிகாரம் வழங்கிடவும் இலங்கை அரசு ஆவன செய்ய இந்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளல்.
- ஒருசில மாவட்ட தபால்துறை கண்காணிப்பாளர்கள் தபால் தலைச் சலுகை பெற்ற இதழ்களுக்கான கட்டணத்தை தன்னிச்சையான முறையில் கடுமையாக உயர்த்தி சிற்றிதழ்கள் வளர்ச்சிக்கு நெருக்கடி தருவதைக் கண்டிப்பது.
- நமது சங்க உறுப்பிதழ்களுக்கு தொடர்ந்து நிதியுதவி அளித்து வரும் மைசூர் இந்திய நடுவண் மொழிகள் நிறுவனத்திற்கு நன்றியும், தொடர்ந்து மற்ற உறுப்பிதழ்களும் பயன்பெற ஆவன செய்வதும்.
- சாகித்திய அகாதெமி - செம்மொழி உயராய்வு மையம் - பல்கலைக் கழகங்களோடு இணைந்து கருத்தரங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது.
- குற்றாலத்தில் நடைபெற உள்ள 5 - ஆவது மாநாடு - பொதுக்குழு அமர்வு குறித்து.. மாநாட்டு அமைப்பாளர் சொக்கம்பட்டி ரஹீம் உடன் விவாதிக்கப்பட்டது.
- சங்க நிர்வாகிகளின் செயல்பாடுகள் - எதிர்காலத் திட்டங்கள் - உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகரித்தல் பற்றி விவாதிக்கப்பட்டது.
- தினமணி நாளேடு 'இலக்கிய சங்கமம்' பகுதியை திங்கட் கிழமையாக மாற்றியமைத்ததை மீண்டும் (விடுமுறை நாட்களைத் தவிர்க்க) வியாழக்கிழமைக்கு மாற்றியமைக்கக் கோருதல்.
- உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பினர் தச்சன் நாகராஜன் இணையருக்கு வாழ்த்து.
- யாதும் ஊரே இதழாசிரியர் நா. வை. சொக்கலிங்கம், தெளிதமிழ் இதழாசிரியர் முனைவர். இரா. திருமுருகனார் மற்றும் எழுத்தாளர் ராஜமார்த்தாண்டன் ஆகியோர் மறைவுக்கு அஞ்சலி.
- மகாகவி மாதஇதழ் தொடர்ந்து சங்கச்செய்திகளை விரிவாக வெளியிட்டு வருவதையடுத்து சங்கத் தலைமையிதழாக ஏற்றுக் கொள்ளல்.
- இனி வரும் காலங்களில் ஆண்டுக்கு 2 அல்லது 3 செயற்குழுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்வது.

# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தில் இணைந்த புதிய உறுப்பிதழ்கள்

74. KOZHUNTHU - ANTHONY JEEVA
57, Mahinda Place, Colombo -6, SRI LANKA.

75 . இப்படிக்கு - செ. கோவிந்தராசன்
4/2, இளங்கோ தெரு, அய்யப்ப நகர், திருச்சி - 21.

## சிற்றிதழ் செய்திகள்

**சமுதாயமுரசு** : மாத இதழ் - ஆசிரியர் : திரு. சா. இராமதாசு
முகவரி : வசந்தி அச்சகம், கணக்காயர் சாலை, வட்டம்-9, நெய்வேலி-1.
தனி இதழ் : ரூ. 5.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 60/-

**வாரமுரசு செய்திச்சுடர்** : - ஆசிரியர் : திரு. அ. ராஜசொர்ணசேகர்
முகவரி : 113F , தெற்கு அம்மன்கோவில்பட்டி வீதி, சிவகாசி கிழக்கு.
தனி இதழ் : ரூ. 15/-

**தாய்மண்** : மாத இதழ் - ஆசிரியர் : திரு. அருமையார்
முகவரி : 32, சோமசுந்தர விநாயகர் கோவில் 2 -ஆவது தெரு, பெரம்பூர், சென்னை - 11.
தனி இதழ் : ரூ. 7.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 70/-

**புதிய மலர்கள்** : மாத இதழ் - ஆசிரியர் : திரு. மா. கதிரொளி
முகவரி : 31, மீனாட்சி அம்மன் நகர், ஒண்டிப்புதூர் -அஞ், கோவை - 18.
தனி இதழ் : ரூ. 10.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 100/-

**செந்தமிழ்** : மாதமிருமுறை - ஆசிரியர் : திரு. க. சொக்கநாதன்
முகவரி : 32, சுப்பிரமணிய சிவா வீதி, குயவர்பாளையம், புதுச்சேரி - 13.
தனி இதழ் : ரூ. 5.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 100/-

**மக்கள் மருத்துவர்** : மாத இதழ் - ஆசிரியர் : மரு. மு. கோவலன்
முகவரி : 7/34,3-வது தெரு, ராம்நகர்,பெரவள்ளூர், சென்னை-82.
தனி இதழ் : ரூ. 5.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 50/-

**சமுதாய நண்பன்** : மாத இதழ் - ஆசிரியர் : திரு. பி. எஸ். ராஜ்
முகவரி : 1348, சிங்காரத்தோப்பு, பார்வதிபுரம், வேட்டூர்ணிமடம் அஞ், நாகர்கோவில் - 629 003.
தனி இதழ் : ரூ. 12.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 125/-

**நமது சட்டப்பார்வை** : மாத இதழ் - ஆசிரியர் : திரு. பி. ஆர். ஜெயராஜன்
முகவரி : 69/42சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் - 7.
தனி இதழ் : ரூ. 10.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 120/-

**அரும்பு** : மாத இதழ் - ஆசிரியர் : குளோரியஸ் ஸ்டீவ்
முகவரி : 45, லேண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 10.
தனி இதழ் : ரூ. 7.00/- ஆண்டுச் சந்தா : ரூ. 75/-

**வதிலை பிரபா**

ஜெயமோகனின் ‘நவீனத்துவத்தின் முகங்கள்’ நூலில்.. “சுந்தரராமசாமி மீதான இன்னொரு குற்றச்சாட்டு ஒரு குறுங்குழுவை ஸ்தாபித்து நடத்துபவர் என்பது. இக் குற்றச்சாட்டைக் கூறும் முற்போக்கு இயக்கத் தவர்கள்தான் தமிழின் குறுங்குழுவாதத்திற்கு தலைசிறந்த உதாரணங் கள். தங்கள் குழுவைச் சேர்ந்த எவருடைய படைப்பையும் தூக்கிப் பிடிப்பவர்கள். எல்லாத் தருணத்திலும் கருத்துக்களை கூட்டாக எடுத்து கூட்டாக முன்வைப்பவர்கள் இவர்களே” என்று குறுங்குழுவாதம் குறித்தான விவாதத்தை முன்வைத்துள்ளார். கிட்டத்தட்ட இந்த விமர்சனம் பதிவாகி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டது. பல நுட்பக் கூறுகளாக பிரிந்து கிடக்கிற சூழல் தற்போது அதிகரித்துள்ளது. அது முற்போக்கு முகாம்களையும் பாதிப்புக்குள்ளாக்கி இருக்கும்தான். நுண்அரசியல் இலக்கிய முகாம்களில் சஞ்சரிப்பதும், ஏற்கனவே இருப்பவர்களை தக்கவைப்பதிலேயே தங்கள் கவனம் அதிகமாக இருப்பதுவும் காரணமாகலாம். இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் நவீன முகங்களின் இறுக்கம் அறிவு மேதாவித்தனத்தை வெளிப்படுத்துகிறது. நுட்பக் கூறுகளில் ஒன்றிணைவதைவிட உள்வட்டத்தோடு புறவட்டங் களையும் ஏற்படுத்தி கவனமாகப் பாதுகாத்து வருவதும் உண்டு. இப்போதெல்லாம் வட்டங்கள் தருக்கங்களை ஏற்படுத்துவதில்லை. தடுமாற்றத்தையே ஏற்படுத்துகின்றன.

●

ஜெர்மனைச் சேர்ந்த கவிஞர் குந்தர் கிராஸ் 1999 -ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு பெற்றவர். இவர் மிகச் சிறந்த சோசலிச ஜனநாயகவாதி. ஆகவே தன்னை அரசியல்வாதி என அறிவித்தவர். “கவிதைகள் சமரசங் களுக்கு ஒப்புக்கொள்வதில்லை. நாமோ சமரசங்களுடனேயே வாழ்கிறோம். இந்த நெருக்கடியை வாழ்வின் ஒவ்வொரு நாளும் பொறுமையுடன் சகிக்கிறவன் முட்டாள். ஆனால் அவன்தான் உலகை மாற்றுகிறான்” என்பது க்ராஸின் கருத்து. படைப்பிலக்கியத்தை அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவும் கருவியாக ஒருபோதும் அவர் கருதியதில்லை. ‘கவிதையின் திசைகள்’ நூலில் சுகுமாரன் பதிவு செய்திருக்கிறார் இப்படி. கவிதை யாருக்கு? கவிதை எதற்கு? கவிஞனுக் கும் - கவிதைக்குமான நுண் தொடர்பில்தான் இதற்கான பதில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. படைப்பாளன் வாயில் ஒட்டப்பட்ட பிளாஸ்டர் - சமரசம். இப்போதெல்லாம் நிறைய பிளாஸ்டர்கள் - நிறைய கவிஞர்கள்.

●

‘இலக்கிய இஸங்கள்’ எனும் நூலில்.. நூலின் தொகுப்பாசிரியர் இ.எஸ்.டி. தனது முன்னுரையில் ஒரு கருத்தை பதிவு செய்திருக் கிறார். “சமீப காலங்களில் மேலைநாட்டு விமர்சனங்களற்ற சில பேர்கள், எழுத்தாளர்களின் படைப்புகளை இந்த இஸம் என்னும் ஒரே உரைகல்லினை வைத்து உரைத்துப் பார்க்கத் தொடங்கி யதோடு, ஆங்கிலப் பரிச்சயம் இல்லாத இளம் படைப்பாளிகளை

மிரட்டியும் வருவது புரிகிறது. இஸங்களை முன்னிறுத்தி எழுதுவதே நல்ல படைப்பு என்று இவர்கள் வாதிடுகிறார்கள். இது ஒரு அபாயகரமான போக்கு. ஒரு காலகட்டத்தில் தமிழில் மாலை மாற்று, ரதபந்தம், மடக்கு என்றெல்லாம் சொல்லி தமிழ்க் கவிதைப் போக்கை முடமாக்க உதவிய பெரும் பண்டிதர்களைப் போன்று, இன்று சில இஸங்கள் பெயரைச் சொல்லி ஆரம்பகால எழுத்தாளர் களை அச்சுறுத்துகின்றனர். தனிப்பட்ட முறையில் மட்டுமின்றி, ஒருசிலர் குழுக்களாகவும் சேர்ந்து கொள்கின்றனர்.. இவர்களின் படைப்பு இலக்கியம்தானா என்பதும், இலக்கியத்திற்கு எந்த அளவு வளம் சேர்க்கின்றனர் என்பதும் காலம் நிர்ணயிக்கும் என்பதோடு விட்டுவிடலாம்." ஆக, இந்த மாதிரியான கருத்து காலம் கடந்தும் யோசிக்கத் தூண்டுகிற ஒன்றாகவே இருக்கிறது. தன்னைப் பெரும் பண்டிதராகக் காட்டும் அதிமேதாவித்தனம் சிறு சிறு குழுக்களிலேயே அதிகம் ஒட்டிக்கிடக்கிறது. அதற்கு 'இஸம்' எனும் கருவி தேவைப்படுகிறது. ஒருவேளை தன்னை அவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் நூதனமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் எல்லா முகாம்களிலும் இது இருக்கிறதே! குடம் - நீர் நிரம்பத் தயாராயிருக்கிறது. நிரம்புவதைப் பொருத்துத் தளும்புவதும் உண்டு. ஆனாலும், இன்னமும் மழை பொழிந்து கொண்டுதானிக்கிறது.

●

இலக்கியத்தில் பலநூறு இஸங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் கற்றுத் தெளியாவிட்டாலும், எழுதுபவன் மனதில் ஒரே ஒரு இஸம் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். இந்த இஸம்தான் - ஹ்யூமனிசம். - தொ.மு.சி. ரகுநாதன் சொன்னது இது. இதைப் படித்துக் கொண்டிருக்கும்போதே - கணையாழி திசம்பர் - 95 இதழில் கவிஞர். எஸ். வைதீஸ்வரன் எழுதிய கவிதையொன்று நினைவுக்கு வந்தது.

**மருள்**

இன்னா செய்தாரை ஒருத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் - குறள்

அப்படியே
மேலும் மேலும்
நன்னயங்கள் செய்து வருகிறேன்
வழக்கமாக.

எவனும்
நாணுகிற வழியாய் காணோம்.
மீண்டும் மீண்டும்
நன்னயமே கிட்டட்டுமென்று
இன்னா செய்கிறான் அயராமல்
இன்னாள் மனிதன்.

வள்ளுவனே, எனக்கொரு
மாற்றுக் குறள் சொல்.
இன்று என்னைப்போல் நல்லவர்கள்
தோற்றுப்போகா வகையில்.

## வதிலை பிரபா

வத்தலக்குண்டு நகரில் 'ழகரப் பணிமன்றம்' ஆண்டு விழாவில் மேனாள் அமைச்சர் கா. வேழவேந்தன் அவர்கள் உரை நிகழ்த்தும்போது - பெயர் நவீனமாக இருக்க வேண்டுமென்பதற்காக அப்பெயரின் அர்த்தம் தெரியாமல் குழந்தைகளுக்குப் பெயரிடுவது வருத்தமளிக்கிறது. 'ஷாம்லி' என்று பெயரிடுபவர்களுக்கு அப் பெயரின் அர்த்தம் 'கருப்பாயி' என்று தெரியாது. 'லத்தி' என்று பெயரிடுகிறார்கள் 'யானைச் சானம்' என்று தெரியாமலே பெயரிடுகிறார்கள் என ஒவ்வொரு பெயராக பட்டியலிட்டார். தமிழில் பெயரிடுவதை இழுக்காக கருதும் காலம் இதுவாகி விட்டது. ஒருவேளை தமிழில் பெயரிட்டால் தமிழர்களே முகம் சுளிப்பார்கள் எனும் நிலையோ? சில நாட்களுக்கு முன்பு இரவு 11 மணியிருக்கும். ஜப்பான் தலைநகரம் டோக்கியோ நகரிலிருந்து என் சகோதரன் என்னை அலைபேசியில் தொடர்புகொண்டு, இங்கே எனது நண்பர் மென்பொருள் வல்லுநர் தனது மகனுக்கு தமிழில் பெயரிடவேண்டும் எனவும், அதற்கு தமிழில் பெயர்கள் சொல்லுமாறு கேட்க, நான் ஆர்வமாக சுமார் 32 பேர்களை பட்டியலிட்டேன். அதில் முதலில் மூன்றாவது பேராக இருந்த 'அருணன்' என்ற பெயரை தெரிவு செய்துவிட்டதாகவும் பின்னர் செய்தி வந்தது. இதை வேழவேந்தன் அவர்களிடமும் பகிர்ந்து கொண்டேன். புலம் பெயர்ந்தவர்களிடம் உள்ள பற்று இங்கே இருப்பவர்களிடம் சற்றுக் குறைவுதான். நண்பர்களே! யாருக்கேனும் குழந்தை பிறந்தால் - 'தமிழில் பெயரிட்டு சான்றோனாகத் திகழ வாழ்த்துகிறேன்' அல்லது 'தமிழில் பெயரிட்டு சிறந்தோங்க வாழ்த்துகிறேன்' என நாம் வாழ்த்தும் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

●

நகரவங்கி இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு 'அப்பாவுக்கு ஒரு இ-மெயில்' எனும் சிறுகதைத் தொகுப்பைக் கொண்டு வந்து, இதைப் படியுங்கள் என்று கொடுத்தார். சிலநாட்களாக எனது மேசையில் கிடந்த அந்தத் தொகுப்பை புரட்டியபோது - மனதின் அடிஆழத்தில் பலநாட்களாக கிடந்த - ஜீரணமாகாத பல நினைவு களை அசைபோட வைத்தது. நூலாசிரியர் கல்யாண்குமார் முன்னுரை இல்லாத சிறுகதைத் தொகுப்பு என சொன்னதோடு அதற்கான காரணத்தையும் பதிவு செய்திருந்தார். "இந்தச் சிறுகதைத் தொகுப்பிற்கு யாரிடம் முன்னுரை வாங்குவது எனகிற ஒரு கேள்வி எழுந்தது. நேரமோ குறைவு. ஒரு பத்திரிக்கையாளனாக, எழுத்தாள னாக எனக்கு அறிமுகமான எழுத்தாளர்களின் பெயர்களை பட்டிய லிட்டபோது ஒரு அதிர்ச்சித் தகவல் என் முன்னே வைக்கப்பட்டது. நீங்கள் அவரிடம் முன்னுரை வாங்கினால் இவரைப் பகைத்துக்

கொள்ள வேண்டியிருக்கும்... எழுத்தாளர்களுக்குள்ளும் ஒரு அரசியல் வட்டம் ஏற்பட்டிருப்பது கண்டு அதிர்ந்து போனேன்,,," எனவும் பதிவு செய்திருந்தார். இப்போதெல்லாம் குட்டையைக் குழப்பி மீன் பிடிப்பது வாடிக்கையாகிவிட்டது. அரசியல் - அமைப்புகள் - அதன் கொள்கை - என பிரிந்துகிடந்த இலக்கிய வட்டம், 'இஸங்கள்' சார்ந்தும், காலச்சுழற்சியில் உருவாகும் 'நுண்வட்டம்' சார்ந்தும் பிரிந்துகிடந்தாலும் - எழுத்தாளர்களின் சாரம் அவ்வளவாக குறைந்துவிடவில்லை. இருப்பினும் தனிமனித துதிபாட ஒரு கூட்டம் வேண்டுமென்பதற்காக ஒரு ஆராதனைப் பட்டியலை தயாரிக்கவும் - 'நெம்பர் 1' குறித்த மனக்கணக்கில் லயிப்பவர்களின் குறுமதி தூண்டல்களும் இந்நிலை தற்போது இலக்கிய உலகில் அதிகம் ஏற்படக் காரணமாயிற்று. இதில் இளம் - புதிய படைப்பாளர்களே பெரும்பாலும் பாதிக்கலாகின்றனர். இலக்கிய உலகில் வணிகர்களைப் புறக்கணிக்கிற காலமொன்றுண்டு என்பதை காலம் பதிவு செய்துகொண்டுதான் இருக்கிறது. பொய்யான சங்கதிகளை அவிழ்த்துவிட்டு, பொய்மைக்கயிறு திரிக்க முற்படும் இவர்கள் அறியவேண்டும். மனசில் கோட்டை கட்டலாம். மணலில் கோட்டை கட்டமுடியாது.

●

கவிஞர். கடற்கரய் தனது ' விண்மீன் விழுந்த இடம்' எனும் நூலில் ஹெரால்ட் பின்ட்டர் சொன்ன யதார்த்தம் குறித்த விளக்கங்களை பதிவு செய்திருந்தார். "யதார்த்தத்திற்கும், யதார்த்தமின்மைக்கும் பெரிய அளவில் வித்தியாசங்கள் இல்லை. அதே போன்றுதான் உண்மையும், பொய்யும். ஒரு பொருள் உண்மையாகவோ பொய் யாகவோ இருக்கத் தேவையில்லை. அது, உண்மையாகவும் பொய் யாகவும் ஒரே நேரத்தில் இருக்கக்கூடும். " என்கிறார் ஹெரால்ட் பின்ட்டர். எதார்த்தம் குறித்த சிறிதும் புரிதல் இல்லாதவர்கள் மைதானத்தில் கால்களால் எட்டி உதைக்கப்படும் பந்தைப் போன்று ஒவ்வொரு கோல்களாக விழுந்துகொண்டிருக்கிறார்கள் - உண்மைக்கும், பொய்மைக்கும் இடைப்பட்டதான மைதானத்தில்.

●

கவிஞர். கவிமுகில் சமீபத்தில் வெளியிட்ட 'கவிமுகில் கவிதைகள்' நூலிலிருந்து.. ஒரு கவிதை

அவன்
பாட்டில் பாட்டிலாய்
பிராந்தி குடித்தான்.

குடும்பம்
பாட்டிலை விற்றுக்
கஞ்சி குடித்தது.

பளீச் சென்ற இந்தக் கவிதை அதிர வைத்தது.